**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, பத்மநாபபுரம்**

**முன்னிலை திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,

**2026** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் நாள் **புதன்கிழமை**

**<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.258/2025</u>**

**CNR.No.TNKK09000423-2025**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

தக்கலை காவல் நிலையம்,

குற்ற எண்.62/2025 ................ குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

மணிகண்டன் (வயது 35/2025),

த/பெ. பொன்னையன் ஆசாரி,

தேம்பாறைவிளை,

வெண்டலிகோடு அஞ்சல் ................... குற்றம் சுமத்தப்பட்ட நபர்

## CASE SUMMARY

| **Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019** | | | |
|---|---|---|---|
| 1. | Case Number | | Summary Trial Case(STC) No.258 of 2025 |
| 2. | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Thuckalay Police Station,<br>Thuckalay. (Cr.No.62/2025).<br>…..Complainant |
| 3. | Name of the Accused person | Description of the Accused | Manikandan |
| 4. | Father's/Husband's Name | | Ponnaian Asari |
| 5. | Occupation | | Salesman |
| 6. | Residence of the Accused | | Themparavilai, Vendalicode Post |
| 7. | Age and Gender | | 35/2025, Male |
| 8. | Date of Occurrence | Date of | 20.01.2025 at 17.00 hours |

<table>
<tr><td>9.</td><td>Date of Information to the Police</td><td rowspan="4"></td><td colspan="3">20.01.2025 at 17.30 hrs</td></tr>
<tr><td>10.</td><td>Apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Release on Bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Period of remand of the accused</td><td colspan="3">--</td></tr>
<tr><td>13.</td><td>Filing of complaint/final report in the Court</td><td rowspan="8">Date of</td><td colspan="3">05.02.2025</td></tr>
<tr><td>14.</td><td>Committal of the case to the Court of Sessions</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>15.</td><td>Questioning of the accused u/s 281 of Cr.P.C</td><td colspan="3">15.06.2026</td></tr>
<tr><td>16.</td><td>Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused</td><td colspan="3">28.11.2025</td></tr>
<tr><td rowspan="2">17.</td><td rowspan="2">Examination in Chief and Cross examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross Examination</td></tr>
<tr><td>-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>18.</td><td>Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C</td><td colspan="3">-</td></tr>
<tr><td>19.</td><td>Closure of Trial</td><td colspan="3">-</td></tr>
<tr><td rowspan="2">20.</td><td rowspan="2">Details of abscondence of an accused and his appearance/production, as the case may be</td><td rowspan="2"></td><td>Warrant</td><td>Abscondence</td><td>Appearance</td></tr>
<tr><td>Non-Bailable Warrant</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>21.</td><td>Grant of stay by superior Courts and results thereof</td><td></td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>22.</td><td>Sentence or Order</td><td></td><td colspan="3">முடிவாக, இவ்வழக்கின் குற்றவாளி என தீர்மானம் செய்யப்பட்ட குற்றவாளியான மணிகண்டன், த/பெ.பொன்னையன் ஆசாரி என்பவரை (Probation of Offenders Act 1958) குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4ன் கீழ்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td colspan="3">விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>23.</td><td>Service of copy of judgment of findings on accused</td><td></td><td colspan="3">Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal.</td></tr>
<tr><td>24.</td><td>Explanation of delay</td><td></td><td colspan="3">-</td></tr>
<tr><td>25.</td><td>Details of victim compensation ordered</td><td></td><td colspan="3">Nil</td></tr>
<tr><td rowspan="3">26.</td><td rowspan="3">Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court</td><td rowspan="3"></td><td>Petition</td><td>Crl.M.P.No</td><td>Result</td></tr>
<tr><td>-</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
</table>

இவ்வழக்கு 05.02.2025 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் என் பரிசீலனையில் இருந்து வந்து இன்று **03.06.2026** ஆம் தேதி இவ்வழக்கு இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **சிவகாந்த். S.V.** அவர்கள் ஆஜராகியும், அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை **உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள்** ஆஜராகியும் இருதரப்பு வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **01.07.2026** நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்

கடந்த 20.01.2025-ம் தேதி 17.00 மணியளவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தக்கலை டார்லிங் கடை முன்பு நின்று கொண்டு போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறு உண்டுபண்ணி, அருவருப்பான கெட்டவார்த்தைகள் பேசி, பொது ஜன அமைதிக்கு இடையூறு செய்த குற்றம் புரிந்ததாக புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக **பாரதிய நியாய சன்கிதா 2023 பிரிவு 293-ன் கீழ்** தண்டிக்கத்தக்கவர் என்று **பா.நா.சு.ச 2023 பிரிவு 173(1)ன் கீழ்** குற்றமுறையீட்டாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** குற்றம் சுமத்தப்பட்ட நபர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் **பா.நா.சு.ச 2023 பிரிவு 230** ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. **பா.நா.சு.ச 2023 பிரிவு 274 ன்** கீழ் குற்றசாட்டுகள்

வனைந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் விளக்கி கூறி வினவிய போது குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**3.** குற்றம் சுமத்தப்பட்ட நபர் தற்போது வழக்கு விசாரணையின்போது குற்றத்தை ஒப்புக்கொள்கிறாரா என்பதை பார்க்கும்போது, குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான **பாரதிய நியாய சன்கிதா 2023 பிரிவு 293-ன் கீழ்** குற்றச்சாட்டை ஒப்புக்கொள்வதாக கூறி குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்து அவர்களுக்கு குறைந்த அபராதம் விதிக்குமாறும் நன்னடத்தை சட்டத்தின் கீழ் அவரை விடுதலை செய்யுமாறும் மனு தாக்கல் செய்தார். அதனடிப்படையில் நன்னடத்தை அலுவலருக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குணம், முந்தைய வாழ்க்கை, குடும்ப சூழ்நிலை மற்றும் அவர்களின் வீட்டை சுற்றியுள்ள சூழ்நிலைகள் முதலியவற்றை பற்றி விசாரணை செய்து அறிக்கை தயாரித்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்புமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதனடிப்படையில், நன்னடத்தை அதிகாரியிடமிருந்து அறிக்கை பெறப்பட்டது.

**4.** மேற்படி அந்த அறிக்கையில், குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தாயார், சகோதரி ஆகியோர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது மிகவும் அக்கறை கொண்டுள்ளனர் என்றும் முன்கோபத்தில் நிதானத்தை இழந்து குற்றம் செய்ததாகவும், மேலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் செய்த செயலை நினைத்து வருந்துவதாகவும், இனி வருங்காலங்களில் எந்தவித குற்ற செயலிலும் ஈடுபடமாட்டேன் என்றும் நல்லமுறையில் வாழ்வதாக உறுதியளித்ததாகவும், எதிர்கால வாழ்க்கை மற்றும் குடும்பத்தினரை கருத்தில் கொண்டு குற்றத்தை மன்னித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வேண்டினார் என்றும் எனவே குற்றத்தை மன்னித்து விடுதலை செய்வதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நல்லமுறையில் பொறுப்பான நபராக வாழும் நிலை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** எனவே பா.நா.சு.ச 2023 பிரிவு 274 ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ள படியால் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குற்ற ஒப்புதலை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

**6.** எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கருதி மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் பாரதிய நியாய சன்கிதா 2023 பிரிவு 293-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7.** கற்றறிந்த குற்றவாளி தரப்பு வழக்கறிஞர் தங்களது தரப்பில் மேற்படி குற்றவாளியின் வயது, கல்வி, குடும்ப சூழ்நிலைகள், பெற்றோர்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு ஆகியவற்றை குறிப்பிட்டு இந்நீதிமன்றத்திடம் மேற்படி குற்றவாளியை வழக்கின் தன்மை கருதி குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4-ன் கீழ் மேற்படி குற்றவாளியை விடுவிப்பு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**8.** இந்நீதிமன்றம் மேற்படி கோரிக்கையை பரிசீலிக்கையில் குற்றவாளியின் வயது, அவரது குடும்ப சூழ்நிலை, முன்குற்ற தண்டனை எதுவும் இல்லை என்பதை மேற்படி நன்னடத்தை அதிகாரி அறிக்கை மூலம் தெரிவித்ததன் அடிப்படையிலும், சமூக சூழியல் மற்றும் இதர சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் மேற்படி குற்றவாளிக்கு குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4 ன் கீழான பலனை வழங்குவது உசிதம் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.** குற்றவாளியிடம் அமைதி மற்றும் நன்னடத்தைக்கான பிணையப்பத்திரம் ஒரு வருட காலத்திற்கு பெறப்பட்டுள்ளது. மேற்படி ஒரு வருட காலம் நன்னடத்தை அதிகாரியின் மேற்பார்வையில் மேற்படி குற்றவாளி இருக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**10**. மேற்படி பிணையப்பத்திரத்தை மீறும் பட்சத்தில் குற்றவாளி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி நீதிமன்றம் வழங்கும் தண்டனையை ஏற்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**11.** எனவே, இவ்வழக்கின் குற்றவாளி என தீர்மானம் செய்யப்பட்ட குற்றவாளியான **மணிகண்டன், த/பெ.பொன்னையன் ஆசாரி** என்பவர் (Probation of Offenders Act 1958) குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**12.** இவ்வழக்கில் குற்றவாளியென தீர்வு காணப்பட்டு குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4 ன் கீழ் விடுதலை செய்யப்பட்ட நபருக்கு மேற்படி சட்டத்தின் (Probation of Offenders Act 1958) பிரிவு 12 ன் கீழான பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும் என்றும்

குற்றவாளி என்று தீர்மானம் செய்யப்பட்டதைப் பொறுத்து வேலை வாய்ப்பில் தகுதி இருக்கும் பட்சத்தில் பணி நியமன அலுவலர்கள் அவரை நிராகரித்திடக்கூடாது என்றும் தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

**13.** இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தால் பதிவுறுவிலோ அல்லது குற்றமுறையீட்டாளரின் பாதுகாப்பிலோ இருக்குமானால் மேற்படி தடயச்சொத்தை உடன் அழிப்பதற்கும் அவ்வாறு அழிக்கும்போது அதில் ஏதேனும் மூலக்கூறுகள் பொருட்கள் அரசுக்கு ஆதாயம் செய்வதற்கு தகுதியென தோன்றினால் அதனை அரசுக்கு ஆதாயம் செய்யுமாறும் உத்தரவிடப்படுகிறது.

**14.** வழக்கின் சந்தரப்பசூழ்நிலை மற்றும் அதன் தன்மையை கருத்திற்கொண்டு **பா.நா.சு.ச 2023** பிரிவுகள் 395 , 396- ன் கீழ் உத்தரவு ஏதும் இல்லை.

**15.** வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை, குற்றவாளியின் வயது, குற்றம் இழைக்கப்பட்ட தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023** பிரிவு **401** மற்றும் குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் 1958 பிரிவுகள் 3, 4 ன் கீழான பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு **2026** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்

Judicial Magistrate No.I Court,
Padmanabhapuram.

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date''.

**நகல்** - நன்னடத்தை காண்காணிப்பு அதிகாரி,
நாகர்கோவில்.